**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை–600025.**

**UM00 உகரம்**

**இணையவழித்தேர்வு**

**நேரம்: 30 மணித்துளிகள்** **மதிப்பெண்: 50**

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **(5x1=5)**

**(இலக்கணம், எலும்புத்துண்டுகள், சொல்லி அடி, கல்பனா சாவ்லா, மனம்)**

1. கீழடியில் விலங்குகளின் ________________________ கிடைத்துள்ளன.
2. ஆறாவது அறிவு எனக் கூறப்படுவது _________________ ஆகும்.
3. தொல்காப்பியம் என்பது ________________________ நூல்.
4. தூய தமிழ்ச்சொற்களை மீட்டெடுக்க உதவும் செயலி _________________.
5. விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் இந்தியப் பெண்மணி ___________________.

**II. சரியா தவறா என எழுதுக.** **(10x1=10)**

1. சாக்ரடீஸ் மக்களைச் சிந்திக்கத் தூண்டினார். (சரி / தவறு)
2. விளையாட்டு வீரர்களுக்குத் துரோணாச்சார்யர் விருது வழங்கப்படுகிறது. (சரி / தவறு)
3. அயோத்திதாசரின் இயற்பெயர் காத்தவராயன். (சரி / தவறு)
4. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர் வள்ளலார். (சரி / தவறு)
5. அன்னை தெரசாவிற்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. (சரி / தவறு)
6. சோவியத் நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய். (சரி / தவறு)
7. ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 28ஆம் நாள் உலக இயற்கை வளங்கள் பாதுகாப்பு நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது. (சரி / தவறு)
8. கல்லணை கரிகாலன் என்ற சோழ மன்னனால் கட்டப்பட்டது. (சரி / தவறு)
9. 'புத்தகங்களுக்காக ஒரு வீடு' என்று ஏங்கிய மனிதர் அண்ணல் அம்பேத்கர். (சரி / தவறு)

10. சங்கர் தயாள் சர்மா இந்தியாவின் பிரதமராக பதவி வகித்தவர். (சரி / தவறு)

**III. பொருத்துக. (5x1=5)**

1. மரம் – தொழிற்பெயர்
2. பள்ளி – பொருட்பெயர்
3. ஆவணி – சினைப்பெயர்
4. கண் – இடப்பெயர்
5. ஆடுதல் – காலப்பெயர்

**IV. கோடிட்ட இடங்களை நிரப்புக. (5x1=5)**

1. வேலவன் பூங்காவிற்குச் ____________________ (சென்றான்/ சென்றது).
2. பூங்காவில் மான் ____________________ (ஓடினர் / ஓடியது).
3. அதை வேலவன் ____________________ (பார்த்தாள் / பார்த்தான்).
4. அவன் அதைக் கண்டு ____________________ (மகிழ்ந்தான் / மகிழ்ந்தேன்).
5. அப்போது குயில் ____________________ (அகவியது / கூவியது).

**V. பொருந்தாததை வட்டமிடுக. (5x1=5)**

1. பகலவன், கதிரவன், ஞாயிறு, நிலா, பரிதி
2. பள்ளி, செய், கழனி, பழனம், வயல்
3. அம்புலி, சந்திரன், மதி, வேழம், நிலவு
4. பூ, பாம்பு, மலர், அரும்பு, மொட்டு
5. பாசம், பரிவு, தூக்கம், அன்பு, நேசம்

**VI. சரியானவிடையைத்தேர்ந்தெடுக்க. (10x1=10)**

1. கீழடி அகழாய்வுத் தளம் தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
   அ) மதுரை ஆ) சிவகங்கை இ) திருநெல்வேலி ஈ) தேனி
2. குடியம் குகை தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
   அ) தூத்துக்குடி ஆ) தஞ்வாவூர் இ) திருவள்ளூர் ஈ) கடலூர்
3. ஜப்பானியர்களின் பாரம்பரிய விளையாட்டு எது?

அ) சுமோ ஆ) வாஷோகு இ) கிமோனோ ஈ) மிசோ

4. ஓரிகாமி என்பது எதைப் பயன்படுத்தி வடிவங்கள் செய்யும் கலை.
   அ) இரப்பர் ஆ) மரம் இ) இலை ஈ) காகிதம்
5. தமிழரின் எந்த நூலில் உயிர்ப்பாகுபாடு குறித்த செய்தி இடம்பெற்றுள்ளது?
   அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) தண்டியலங்காரம் ஈ) ஏலாதி
6. தொல்காப்பியம் என்பது எந்த வகையான நூல்?
   அ) இலக்கியம் ஆ)சிற்றிலக்கியம் இ) இலக்கணம் ஈ) காப்பியம்
7. கல்பனா சாவ்லா எந்த ஆண்டு நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்தார்?
   அ) 1965 ஆ) 1975 இ) 1985 ஈ) 1995
8. மரியா மிட்ச்செல் எந்த நாட்டைச் சேர்ந்த வானியல் அறிஞர்?
   அ) இந்தியா ஆ) அமெரிக்கா இ) இலண்டன் ஈ) பிரான்ஸ்
9. 'சொல்லி அடி' என்ற செயலியில் எத்தனை பிரிவுகள் உண்டு?
   அ) இரண்டு ஆ) நான்கு இ) ஆறு ஈ) எட்டு
10. நுண்செயலி என்பது கணினியின் ________ போன்று செயல்படுவது.
    அ) மூளை ஆ) இதயம் இ) உயிர் ஈ) இரத்தம்

**VII. பொருத்துக.** **(10x1=10)**

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1. | செம்மொழி | – | Blog |
| | 2. | வலைப்பூ | – | Barrier wall |
| | 3. | மேலாண்மை | – | Classical language |
| | 4. | தடுப்புச்சுவர் | – | Millets |
| | 5. | சிறுதானியங்கள் | – | Management |
| ஆ) | 1. | தனித்தன்மை | – | Tradition |
| | 2. | அருகலை | – | Uniqueness |
| | 3. | பாதுகாப்பு | – | Hospitality |
| | 4. | விருந்தோம்பல் | – | Wi–Fi |
| | 5. | மரபு | – | Production |

*****